IN THE COURT OF DISTRICT MUNSIF, T. VADIPATTI, MADURAI DISTRICT

| | | | | |
|---|---|---|---|---|
| | | O.S. No. | : | 48/2015 |
| | | P/W's | : | 1 |
| DEPOSITION OF WITNESS | | | : | |
| NAME | Ramanathan | CASTE | : | |
| S/O. / W/O. | | RELIGION | : | |
| VILLAGE | | CALLING | : | |
| TALUK | | AGE | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of

பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி : **26-11-2021**

தாவா சொத்தின் நான்குமால் விபரங்கள் நான் தான் எனது வழக்கறிஞரிடம் கூறினேன் என்றால் சரிதான். தாவா சொத்தின் நான்குமால் விபரத்தில் வடக்கே பாண்டியராஜன் நாடார் வீடு என குறிப்பிட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி பாண்டியராஜன் நாடார் என்பவரின் வீடு எனது சொத்தின் மேற்கு பக்கத்திலும் கடைசியில் நான்குமாலாக வருகிறது என்றால் இல்லை. எனது சொத்தின் மேற்கு பக்கத்து நான்குமால் என்னவென்றால் இந்த நிர் பிரதிவாதியான ராஜேஸ்வரி மற்றும் கருப்புசேர்வை ஆகியோர்களின் வீடு உள்ளது. நான் தாக்கல் செய்துள்ள பிராதுசொத்து விபரத்தில் மேற்கு பக்க நான்குமாலில் பிரதிவாதி வீடு மட்டும் இருப்பதாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். எனது வீட்டின் நான்கு பக்க அடி அளவு விபரங்கள் எனக்கு நன்கு தெரியும் என்றால் ஓரளவிற்கு தெரியும். வடக்கு பக்கம் 13.8 மீட்டரும், மேற்கு பக்கம் 10.6 மீட்டரும் அளவீடுகளாக உள்ளது. தெற்கு மற்றும் கிழக்கு பக்கம் அளவீடுகள் சரியாக தெரியவில்லை. எனது வீட்டிற்கு மேற்கு பக்கம் எப்போதும் வாசல் கதவு இருந்ததில்லை என்றால் சரிதான். எனது வீட்டிற்கு முதலில் கிழக்கு பார்த்த வாசல் இருந்தது என்றால் சரிதான். ஆனால் அதனுடன் சேர்ந்து தெற்கு பக்கம் மற்றொரு வாசல் கதவு இருந்தது. எனது சொத்திற்கு மேற்கு பக்கம் பிரதிவாதியின் சொத்திற்கு கிழக்கு பக்கம் காலியிடம் இருந்தது என்றால் சரிதான். ஆனால் அதில் மாட்டுக்கொட்டம் இருந்தது. மேற்படி மாட்டுக்கொட்டம் எவ்வளவு காலமாக இருந்தது என்றால் நான் சிறுவயதில் இருந்தே இருந்தது. மேற்படி மாட்டுக்கொட்டம் இருந்ததாக நான் குறிப்பிடும் இடம் தென்வடல் சந்தாக இருந்தது என்றும், அது மதுரை —— திண்டுக்கல் நான்குவழி சாலை வரை செல்லக்கூடியது என்றறல் இல்லை. வருவாய் துறை ஆவணங்களில் மேற்படி மாட்டுக்கொட்டம் இருந்ததாக நான் குறிப்பிடும் இடமும் அதன் தொடர்ச்சியாக மதுரை திண்டுக்கல் மெயின்ரோடு வரை உள்ள இடமும் வருவாய் துறை ஆவணங்களில்

பாதையாக தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் இல்லை. மேற்படி இடம் சந்தாக அனைவருக்கும் பாத்தியமானதாக இருந்து வருகிறது என்றும், எனக்கு மட்டும் தனித்து பாத்தியமானதாக இல்லை என்றால் சரியல்ல. மேற்படி சந்தாக உள்ள நான் குறிப்பிடும் மாட்டுகொட்டம் அமைந்துள்ள இடத்திற்கு மேற்கு பக்கம் பிரதிவாதியின் வீடு அமைந்துள்ளது என்றால் சரிதான். சந்து என சொல்லப்படும் இடத்திற்கு மேற்கு பக்கம் முத்தையா என்பவரது இடம் ஆதியில் இருந்து வந்தது என்றால் சரிதான். மேற்படி முத்தையா என்பவரின் வாரிசான அவரது பழனிக்குமார் என்பவரிடம் இருந்து இந்த பிரதிவாதி ராஜேஸ்வரி என்பவர் மேற்படி மேற்கு பக்கம் உள்ள இடத்தை கிரையம் பெற்றுள்ளார் என்றால் சரிதான். எனது வீட்டிற்கு மேற்கு பக்கம் பிரதிவாதி ராஜேஸ்வரி என்பவரின் வீடு மற்றும் கருப்புசேர்வை என்பவரின் வீடு உள்ளது என்றால் சரிதான். எனது வீட்டின் தெற்கு பக்கம் சேவுசேர்வை மற்றும் சுப்பு சேர்வை வீடு உள்ளது என்றால் சரிதான். எனது வீட்டிற்கு கிழக்கு பக்கம் சேவுசேர்வை வீடும் தென்வடல் வீதியும் உள்ளது என்றால் தென்வடல் வீதி மட்டும தான் உள்ளது. சேவு சேர்வை வீடு அங்கு இல்லை. நான் தாக்கல் செய்த பிராது சொத்து விபரத்தில் தெற்கு நான்குமாலாக சேவுசேர்வை வீடு இருப்பதாக குறிப்பிடாமல் சுப்பு சேர்வை வீடு மட்டும் இருப்பதாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். இந்த வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட நீதிமன்ற ஆணையாளர் அறிக்கையில் குறிப்பிட்ட விபரங்கள் எனக்கு நன்கு தெரியும் என்றால் சரியாக ஞாபகமில்லை. நான் எனது வீட்டின் மேற்கு பக்கம் அளவீடாக 10.6 மீட்டர் என்று குறிப்பிட்டுள்ளதில் எனது வீட்டிற்கு மேற்கு பக்கம் உள்ள பிரதிவாதி ராஜேஸ்வரி மற்றும் கருப்பு சேர்வை ஆகியோர்களது வீடு எத்தனை மீட்டர் அளவில் அமைந்துள்ளது என்றால் அதுபற்றிய விபரம் எனக்கு தெரியவில்லை. எனது வீட்டிற்கு மேற்கே பிரதிவாதி ராஜேஸ்வரி என்பவரின் வீடானது முழுமையான அளவில் அமைந்திருக்கவில்லை என்றும், 6.8 மீட்டர் அளவில் அமைந்துள்ளது என்றால் அதுபற்றி எனக்கு ஞாபகமில்லை. அதேபோல் எனது வீட்டிற்கு மேற்கே உள்ள கருப்புசேர்வை வீடும் 3.2 மீட்டர் அளவிலும், அதேபோல் பாண்டியராஜன் என்பவரின் வீடு 0.6 மீட்டர் அளவிலும் அமைந்துள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. எனது வீட்டிற்கு மேற்கே உள்ள பிரதிவாதி ராஜேஸ்வரி வீடு அமைந்துள்ள இடமானது சர்வே எண்.558/5லும், கருப்பு சேர்வை வீடானது சர்வே எண்.558/6லும் பாண்டியராஜன் வீடு சர்வே எண்.558/4லிலும் கட்டுப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனது வீட்டிற்கு மேற்கு பக்கம் அமைந்துள்ள முத்தையா என்பவருக்கு பாத்தியமான வீடானது ஆதியில் 60, 70 வருடங்களுக்கு முன்பு கட்டப்பட்ட வீடு என்றால் சரிதான். இந்த பிரதிவாதியின் கிரையதாரர் முத்தையா என்பவரின் வாரிசுகளில் ஒருவர் என்றால் சரிதான். அவ்வாறு முத்தையாவின்

வாரிசிடம் இருந்து கிரையம் பெற்ற இடத்தில் தான் பிரதிவாதி பழைய வீட்டை இடித்து விட்டு புதிய வீடு கட்டியுள்ளார் என்றால் சரிதான். பிரதிவாதி அவர் கிரையம் பெற்ற பழைய வீடு இருந்த அதே இடத்தில் தான் அதனை இடித்துவிட்டு அதே இடத்தில் புதிய சுவர் கட்டியுள்ளார் என்றால் இல்லை. பிரதிவாதி தாவா இடத்தை எந்த நிலையிலும் ஆக்கிரமிப்பு செய்யவில்லை என்றால் சரியல்ல. எனது வீட்டிற்கு மேற்கு பக்கம் உள்ள இடமானது அனைவருக்கும் பாத்தியமான பொதுசந்தாக இருந்தது என்றும், அந்த பொதுசந்திற்கு மேற்கே தான் பிரதிவாதிக்கு பாத்தியமான வீடு உள்ளது என்றால் சரியல்ல. பொதுசந்து இருப்பதாக குறிப்பிடப்படும் இடமானது எனக்கு சொந்தமானது ஆகும். நீதிமன்ற அறிக்கையை தெரிந்துகொண்டேன் என்றால் சரிதான். அந்த ஆணையாளர் அறிக்கை பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட ஆட்சேபணையினையும் தெரிந்துகொண்டேன் என்றால் சரிதான். நீதிமன்ற ஆணையாளர் அறிக்கையுடன் தாக்கல் செய்யப்பட்ட வரைபடமான நீ.ம.சா.ஆ.1ன் படி எனது இடத்திற்கு மேற்கு பக்கம் உள்ள சர்வே எண்.558/6ல் கட்டுப்பட்ட கருப்புசேர்வை என்பவரின் வீடு தான் எனது இடத்தில் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. மேற்படி நீ.ம.சா.ஆ.1ன் படி இந்த பிரதிவாதியின் வீடோ கட்டுமானங்களோ எனது இடத்தில் எவ்வித ஆக்கிரமிப்பும் செய்யப்படவில்லை என்பது தெளிவாகிறது என்றால் சரியல்ல. நீ.ம.சா.ஆ,1ல் வடக்கு பக்கம் 13.8 மீட்டர் அளவில் குறைபாடு இருப்பதாக சர்வேயர் குறிப்பிடவில்லை என்றால் அவர் தவறுதலாக குறிப்பிட்டுள்ளார். மேற்படி நீ.ம.சா.ஆ.1ல் பிரதிவாதி ஆக்கிரமிப்பு செய்து கட்டடியிருக்கும்பட்சத்தில் அதை சர்வேயர் வரைபடத்தில் குறிப்பிட்டிருப்பார் என்றும், அவ்வாறு இல்லை என்பதால் தான் அதுபற்றிய விபரங்கள் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. எனது வீட்டின் தென்புற அளவாக நீ.ம.சா.ஆ.1ல் 7.8 மீட்டர் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி 7.8 மீட்டர் என்பது அதற்கு மேற்குப்புறம் உள்ள கருப்பு சேர்வை வீட்டுடன் முடிகிறது என்றால் சரிதான். அந்த இடத்தில் தான் கருப்பு சேர்வை என்பர் 0.02 மீட்டர் அளவில் ஆக்கிரமிப்பு செய்ததாக சர்வேயர் வரைபடத்தில் குறிப்பிட்டுள்ளார் என்றால் இல்லை. அவர் தவறுதலாக குறிப்பிட்டுள்ளார். நீ.ம.சா.ஆ,1ன்படி கருப்புசேர்வை என்பவர் தான் எனது இடத்தில் ஆக்கிரமிப்பு செய்து கட்டியுள்ளார் என்றும், பிரதிவாதி ராஜேஸ்வரி எவ்வித ஆக்கிரமிப்பும் செய்யவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தில் நான்குமாலில் குறிப்பிடப்பட்ட நபர்களை அசல் வழக்கில் தரப்பினர்களாக சேர்க்காததால் அசல் வழக்கு தள்ளுபடி செய்யக்கூடியது என்றும், பிராதில் குறிப்பிட்டுள்ளதுபோல் பிரதிவாதி எவ்வித ஆக்கிரமிப்பும் செய்யவில்லை என்றால் சரியல்ல. நீதிமன்ற ஆணையாளர் பிரதிவாதியால் எவ்வித ஆக்கிரமிப்பும் செய்யப்படவில்லை என அறிக்கை தாக்கல் செய்த பின்பும் பிரதிவாதி மீது உள்ள

விரோதத்தின் அடிப்படையில் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. பிரதிவாதியின் முன்கிரையதாரார்கள் தாவா சொத்தை அனுபவம் செய்து வந்ததின் அடிப்படையில் பிரதிவாதிக்கும் மேற்படி அனுபவ பாத்திய உரிமை சட்டப்படி கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல. நீதிமன்ற ஆணையாளர் அறிக்கைக்கு நான் ஆட்சேபணை தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. தாவா சொத்திற்கான நான்குமால் மற்றும் அடி அளவுகள் சரியாக குறிப்பிடப்படவில்லை என்றும், பிரதிவாதி எவ்வித ஆக்கிரமிப்பும் செய்யவில்லை என்றும், வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

(ஒம்.) திரு. D. ராம்கணேஷ், எம்.ஏ.,எம்.எல்.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
வாடிப்பட்டி